# ரொறன்ரோ சமூகவளத் தொடர்புகள் (சீஆர்சீரீ-CRCT)

மிகப்பாரதூரமான உளநலப் பிரச்சினைகள் உள்ள 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் சமூகத்தில் மதிப்புடனும் மனநிறைவுடனும் வாழ்வதற்கு சீஆர்சீரீ பல வழிகளிலும் ஆதரவு வழங்குகிறது.

மதிப்பு, தெரிவுச் சுதந்திரம், நம்பிக்கை, உறுதி கொள்தல், பாவனையாளர்களால் வழிகாட்டப்படல், இணைந்து செயற்படல், வாய்ப்புக்களை வழங்குதல், நீதி, நியாயம், சமத்துவம், ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு நாம் செயற்படுகிறோம். உலகின் பல்வேறுபட்ட சமூக-பண்பாட்டு அநுபவங்களை உள்வாங்கி அவற்றைப் பெரிதாகப் போற்றிக் கொள்வதில் சீஆர்சீரீ மிகுந்த அக்கறை காட்டுகிறது. எங்கள் சேவையானது இனத்துவேசம், அடக்குமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகளைக் கொண்டது,

## எங்கள் செயல் திட்டங்கள்

- சமூக ஆதரவுச் சேவைகள் (கிழக்கு-மேற்கு குழுக்கள்), குடும்பச் செயல் திட்டம்
  சோமாலி, தமிழ்மொழிச் சேவைப் பணியாளர்கள்
- உடல்-உள நலன் விருத்திச் செயல் திட்டம்
- விடுதி-வதிவிட அரவணைப்புச் சேவைத் திட்டம் (HOP) (பெண்களோடு பணிசெய்தல்)
- உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

## சமத்துவ சேவை

வீடற்ற நிலமை, குற்றச்செயல் தொடர்பான சட்டப் பிரச்சினை, இனம், பண்பாடு, இனக்குழுமம், பால்பகுப்பு, மொழி ஆகிய காரணங்களால் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் தடைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எங்கள் நிறுவனம் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

சீஆர்சீரீ கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ரொறன்ரோப் பகுதியில் சேவையாற்றும் இலாபநோக்கற்ற, சமூக உளநல அறக்கொடை முகவர் நிலையமாகும்.

நாங்கள் உளநல அமைப்பைப் பயன்படுத்தும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவியளிக்கிறோம். ஒன்ராறியோ சுகாதார-நெடு நாள் பராமரிப்பு அமைச்சு பிரதான நிதி உதவியை வழங்குகிறது. ரொறன்ரோ பெரும்பாக யுனைட்டட் வே, கனடிய பாரம்பரிய அமைச்சு, ரொறன்ரோ றொட்டரிக் கழகம், ஈஜேஎல்பி பவுண்டேசன், ஒன்ராறியோ றிறில்லியம் பவுண்டேசன், ரொறன்ரோ நகர சபை- சேவைபெறும் வழி, சமத்துவ நிதியளிப்பு ஆகியவற்றால் துணை உதவி நிதி வழங்கப்படுகிறது.

## அறக்கொடைப் பதிவு எண்:

#118871128 RR0001

நன்கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும் ரொறன்ரோப் பகுதிக்கான எங்கள் உதவிகள், வளங்கள், உளநல சேவைகள் பற்றிய முழுமையான வழிகாட்டிக்கும் www.crct.org இணையத் தளத்தைப் பார்க்கவும்.

Community Resource Connections of Toronto

366 Adelaide Street East, Suite 230 | Toronto, ON M5A 3X9
தொ.பே: (416) 482-4103 | தொ.ந: (416) 482-5237 | crct@crct.org

# Community Resource Connections of Toronto

## உடல்-உள நலன் விருத்தித் திட்டம் (முன்னர் ஆலோசகர் சேவை எனப்பட்டது)

## உடல்-உள நலன் விருத்தி

சீஆர்சீரீ இலாபநோக்கற்ற சமூக உளநல முகவராக ரொறன்ரோப் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் அநுபவம் கொண்ட நிறுவனமாகும். சமூக வளத் தொடர்பு நிலையத்தில் உடல்-உள நலன் விருத்தி (முன்னர் ஆலோசனைச் சேவைகள் எனப்பட்டது) ஒரு செயல் திட்டமாகும்.

## நாங்கள் எதைச் செய்கிறோம்?

உளநலப் பிரச்சினைகளோடு வாழ்பவர்கள் ரொறன்ரோவில் உளநலச் சேவைகளில் திட்டமிடல், வழங்குதல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் ஆக்கபூவர்வமாகப் பங்கு கொள்வதற்கு உடல்-உள நல விருத்திப் பணியாளர்கள் உதவுகிறார்கள்.

## யாருடன் பணியாற்றுகிறோம்?

எமது உளநல அதிகார எல்லைக்குள் மேலதிகமான தடைகளை அனுபவிக்கும் தனியார் அல்லது குழுக்களுக்கு ஆதரவு தருவதுடன் பணியாற்றுவதற்கும் நாம் எங்களை அர்ப்பணிக்கிறோம். உதாரணமாக வீடற்றவர்கள், சட்டத்தோடு முரண்பட்டவர்கள் மற்றும், மொழி, வறுமை, இனம், பண்பாடு, இனக்குழுமம், குடியேற்றத் தகைமை, மீள்குடியேற்ற அழுத்தம் மற்றும் பாலியல் அல்லது தனது அதே பாலினத்தில் பாலியல் விருப்புள்ளமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களோடு நாங்கள் பணியாற்றுகிறோம்.

## எமது சேவைகளை யார் பயன்படுத்தலாம்?

சமூக உளநல முகவர்கள், பயனடைவோர், நோயிலிருந்து குணமடைந்தோர், குழுக்கள், குடும்பக் குழுக்கள் வைத்தியசாலைகள் மற்றும் சமூகக் குழுக்கள் ஆகியவற்றிற்கு எங்களது உள-உடல் நல விருத்திச் சேவைகள் கிடைக்கின்றன. எங்களது தகவற் சேவைகள் தனிப்பட்டோர், குழுக்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் கிடைக்கின்றன.

## எங்கள் நம்பிக்கைகளும் பெறுமதிகளும் யாவை?

உளநலப் பிரச்சினைகளோடு வாழ்பவர்கள் குணமடையவும் இயல்பு நிலையை அடையவும் கூடியவர்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. மக்கள் தங்களின் முழுமையான தகைமையை உணர்ந்து கொள்வதிலும் சமூகத்தோடு ஒன்றி வாழ்வதற்குரிய முயற்சிக்கான வாய்ப்புக்களை வழங்கி வாழ்வை உயர்த்துவதிலும் நோய் குணமடைவது தங்கியுள்ளது.

## சமூக அபிவிருத்தி நாம் செய்யக்கூடியவை

- சமூக அபிவிருத்தி முறையினால் புதிய செயற் திட்டங்களையும் சேவைகளையும் சமூகக் குழுக்கள் உருவாக்க உதவுதல்
- சேவைகளையும், தகவல்களையும் பெறுவதற்கு உரிய தடைகளை நீக்குவதற்காகக் குழுக்களுடன் பங்காளர் நிலையை வளர்த்தல்
- சேவைத் தேவைகளுக்கான மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல்

## அமைப்பு விருத்தி

- பயன்பாட்டிலுள்ள அமைப்பு ரீதியான வளங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி உளநல முறைகளிலுள்ள குறைபாடுகளைப் போக்குதல்
- உங்கள் சேவைகளைப் பெறுதற்குரிய வழிகளை அதிகரிப்பதற்கு உங்கள் அமைப்பில் உள்ள தடைகளை நீக்குதல்
- திறன்மிக்க திட்டமிடலில் ஈடுபடுதல்
- இயக்குநர் சபை/பணியாளர் முன்னேற்றத்தின் மூலம் அமைப்பின் செயல் திறனை வளர்த்தல்
- செயற் திட்ட மதிப்பீட்டைச் செய்தல்
- உளநல சேவைகளில் பாவனையாளர்/ குணமடைந்தோர் பங்களிப்பை அதிகரித்தல்

## தகவல் விருத்தி/பரவலாக்கல்

- பொருத்தமான வளங்கள், சேவைகள், நிகழ்ச்சிகள், செய்திகள் பற்றிய தகவல்களை www.crct.org என்ற எமது இணையத்தளத்தில் வழங்குதல்
- உளநல வளங்கள் மற்றும் உளநல முறை பற்றிய தகவல்களைத் தொலைபேசி மூலம் வழங்குதல். “தேர்வுகள் செய்தல்,” மற்றும் “விடுமுறைக் கால நிகழ்வுகள்” பற்றிய வழிகாட்டிகளைத் தயாரித்து விநியோகித்தல்
- சமூகத்தில் கருத்தரங்கு நடத்துதலும் தகவல்களைப் பரிமாறுதல்
- தகவல் வளங்களை விருத்தி செய்ய சமூகக் குழுக்களுடன் பங்காளியாகச் செயற்படல்

## கல்வியூட்டலும் பயிற்சிநெறிகளும்

### நாங்கள் செய்யக் கூடியவை:

- தனிநபர்கள், குழுக்கள், குடும்பங்கள் ஆகியவற்றிற்கு உளநல முறைமையும் வளங்களும் பற்றிய கல்வியை வழங்குதல்
- பண்பாட்டுத் தகைமைப் பயிற்சி வழங்குதல்
- புலப்பெயர்வு, மீள்குடியமர்வு காரணமான மன அழுத்தத்திற்கான பயிற்சி வழங்குதல்
- குணமடைதலுக்கான கல்விக் கூட்டத்தை ஒழுங்குசெய்தல்
- உளநல வளங்கள் பற்றிய கல்வியை வழங்குவதால் முதன்மையான உளநல சேவைகளை அடைவதற்கான வழியினை விருத்தி செய்தல்

## அந்தரங்கம் பேணல்

இந் நிறுவனப் பணியாளர்கள், மாணவர்கள், தொண்டர்கள் அனைவரும் அந்தரங்கம் காக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றில் ஒப்பமிடும்படி வேண்டப்படுவர். உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பிரத்தியேகமாக வைத்திருப்பதோடு சட்டப்படி வேண்டப்பட்டாலன்றி உங்களுடைய சம்மதமின்றி அவற்றை எவருக்கும் வெளியிடமாட்டோம்.

எங்கள் அந்தரங்கம் காக்கும் கொள்கைகள் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள செயல் திட்ட அந்தரங்கம் காக்கும் பணியாளரை (416) 482-4103 இணைப்பு 238 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

> “நோயிலிருந்து மீளுதல் சாத்தியம்! உதவிக்கரம் நீட்டல் இதை இலகுவாக்குகிறது”
>
> – நுகர்வோர் ஒருவர்